


# JAMAAT UL SAHIH AL ISLAM – TAMIL NADU



ஜுமுஆ பேருரை

தலைப்பு :

## இஸ்லாத்தின் இறைவனின் கோட்பாடு

**14 February 2020**

**(19 Jamadi'ul Aakhir 1441 A H )**

ஹஸ்ரத் கலீப்.ீ.த்துல்லாஹ்
முனீர் அஹ்மது அஸீம் (அலை)

வெளியீடு

அமீர்,

ஜமா அத் தமிழ்நாடு

**Phone No :- 917502272774**

بسم الله الرحمن الرحيم

# The Conception of God in Islam

# இஸ்லாத்தின் இறைவனின் கோட்பாடுகள்

உலகெங்கிலும் உள்ள தனது அனைத்து ஸஹாபாக்கள் மற்றும் அனைத்து முஸ்லீம்களுக்கும் தனது ஸலாத்தினை தெரிவித்த பிறகு ஹஸ்ரத் ஃகலீஃபத்துல்லாஹ்(அய்) அவர்கள் தஷ்ஹத் தஅவூது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதி **"இஸ்லாத்தில் இறைவனின் கோ ட்பாடு"** என்ற தலைப்பில் **ஜுமுஆப் பேருரையை** வழங்கினார்கள்,

அல்லாஹ்வின் பண்புகளை , அவனது தனித்தன்மை வாய்ந்த மற்றும் அவன் அழைக்கப்படுகின்ற போற்றுதலுக்குரிய பெயர்களின் மூலமாகவும் ஆழ்ந்து சிந்தி ப்பதற்கு இஸ்லாம் விரும்புகின்றது . திருக்குர்ஆன் (இவ்வாறு) :கூறுகின்றது : **இன்னும் அல்லாஹ்வுக்கு மிகவும் அழகிய திருநாமங்கள் இருக்கின்றன; அவற்றைக் கொண்டே நீங்கள் அவனை அழையுங்கள்** .(அல் அஹ்ராஃப் 7:181)

அவனுடைய பெயர்களை விளக்குவதற்கும் வகைப்படுத்துவதற்கும் இறையியல் இலக்கியங்கள் முழு நிறைவாக உள்ளன. நாம் அல்லாஹ்வின் தொண்ணூற்றொன்பது (99) பெயர்களைப் பற்றி அடிக்கடிப் பேசுகிறோம். ,ஆனால் இந்த பெயர்கள் வெவ்வேறு எழுத்தாளர்களால் வெவ்வேறாக

அழைக்கப்படுகின்றன. அதனால் நூற்றுக்கணக்கான பெயர்கள் உள்ளன. அவற்றில் அல்லாஹ்விடம் நாம் அவனை வணங்க விரும்புகின்ற எந்தவொரு பண்பையும் அல்லாஹ்வுக்கு நம்மால் வழங்க முடியும். நாம் மனிதர்கள்! வரையறைக்கு உ ட்பட்டவர்கள் என்றாலும் , அவன் எல்லைக்கப்பாற்பட்டவன் ஆவான். நாம் ஓரளவு மட்டுமே சிந்திக்க முடிகின்ற அதே வேளையில் ,அவனோ முழுமையானவனும், நாம் கற்பனை செய்வதை விட வும் அவன் அதிகம் புரிந்துகொள்பவனும் ஆவான்.அவனுடைய கருணை , அவனுடைய அன்பு , அவனுடைய ஞானம், அவனுடைய மகிமை மற்றும் கம்பீரம் , அவனுடைய நீதி, அவனுடைய உண்மை மற்றும் அவனுடைய நேர்மை, அவனுடைய தனித்துவம் போன்றவற்றைப் பற்றி நாம் சிந்திக்கின்றோம்.ஆனால் அவ்வாறு செய்யும்போது (சிந்திக்கும்போது)நம்முடைய மனம்

எல்லைக்குட்படுத்தப்படுகிறது, ஏனென்றால் நம்முடைய அறிவா னது வரையறைக்குட்பபட்டுள்ள அதே சமயத்தில் , அவனோ அறிகி ன்றவன், புரிகின்றவன், கேட்கின்றவன் மற்றும் எல்லாவற்றையும் மிகைத்து விடுகின்றவனாவான். அவனுக்கு சமமாக எதுவும் இல்லை. நாம் எப்போதும் ஒப்பீட்டளவிலான நிபந்தனைகளில் அதாவது , ‘முதல் மற்றும் கடைசி ’; ’கண்ணுக்குத் தெரி கின்ற மற்றும் தெரியாத ’; இது போன்றவாறு சிந்திக்கிறோம்.ஆனால் அல்லாஹ்விடத்தில் இவ்வாறான எதிரிடையான குணங்கள் ஒன்றுபட்டுள்ளன, இவ்வாறான ஜோடியான பெயர்களை நாம் அல்லாஹ்வுக்குக் கொடுக்கிறோம்: (அதாவது) முதன்மயானவன் மற்றும் இறுதியானவன்; புலப்படுபவன் மற்றும் மறைந்திருப்பவன். நம்மைப் பொறுத்தவரை, நிலைத்திருத்தலின் சிந்தனையானது இரண்டு வரம்புகளான ஆரம்பம் மற்றும் இறுதி (இவைகளை) நிராகரிப்பதைக் குறிப்பிடுகிறது; அல்லாஹ் மட்டுமே நிலைத்திருக்கக்கூடியவன் , அவனுக்கு ஆரம்பமும் இல்லை ; முடிவும் இல்லை. காலம் மற்றும் நிரப்பிடம் தொடர்பாக அல்லாஹ்வைப் பற்றி நாம்

சிந்திக்கிறோம்: ஆனால் நேரமும், நிரப்பிடமும் நமது மனதின் படைப்புகளாகும். அல்லாஹ் நேரம் மற்றும் நிரப்பிடத்திற்கும் (அப்பாற்பட்ட) தன்னிச்சையானவன். உண்மையில், அவன் முழுமையானவன் , சுதந்திரமானவன்; அனைத்தும் அவனையேச் சார்ந்துள்ளது.

இஸ்லாத்தின் முக்கியத்துவம் அல்லாஹ்வின் ஏகத்துவத்தின் மீது தான் உள்ளது என்று பொதுவாக நம்பப்படுகிறது, ஆனால் அவனுடைய கருணை, தயவு மற்றும் அன்பிலும் முக்கியத்துவம் உள்ளதுஎன்றும் தான் கூற வேண்டும். புனித குர்ஆனில் 114 சூராக்கள் உள்ளன , மேலும் ஒன்றைத்தவிர (அதாவது அத் தவ்பாவைத் தவிர) அனைத்துமே, “அளவற்ற அருளாளனும் மேன்மேலும் கருணை காட்டுபவனு மாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால் ”என்றேத் தொடங்குகிறது.

அல்லாஹ்வின் பண்புகளான ‘ரஹ்மான்’ மற்றும் ‘ரஹீம்’ என்ற பெயர்களுக்கு நிகரானது வேறு எந்த மொழியிலுமே இல்லை .எனவே (அவைகளின் பொருள் உண்மையாகவும் , உறுதி யாகவும் பரந்திருப்பதனால்) அவைகளை சரியாக மொழிபெயர்க்க முடியாது.’ரஹீம்’ அல் லாஹ்விடமிருந்து நாம் தேடும் இரக்கத்தையும் மேலும் அது நம்மிடமிருந்து ம றுக்கப்படாததையும் வலியுறுத்துகிறது.

“பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்” என்பது பிரார்த்தனையின் ஆரம்பத்திலும் [அதா வது தொழுகை யில் மற்றும் துஆவா வின் போது] புனித குர்ஆனை ஓதுவதற்கு முன் ,சாப்பிடுவதற்கு முன் , பயணிப்பதற்கு முன் , சில முக்கியத்துவம் வாய்ந்த புனிதமான [ஆன்மீக] அல்லது மார்க்கம் சாராத(பௌதீகமான]. எதனையும் தொடங்குவதற்கு முன் பும் -ஒரு முஸ்லிம் பெரும்பாலும் கூறுகின்ற வாக்கியமாகும்

எனவே ஒரு முஸ்லீமின் செயல்கள் இந்த புனிதமான வார்த்தைகளுடன் நெருக்கமாக பிணைக்கப்பட்டுள்ளது. அல்லாஹ்வின் ஏகத்துவத்தை வலியுறுத்துவது என்பது முக்கடவுள்கொள்கைக்கு எதிரான கண்டனம் மட்டுமல்ல இரு தெய்வ அல்லது பல தெய்வக்கொள்கைக்கும் எதிரானதாகும்.அல்லாஹ் ஒருவனே (என்றும் அவன்) தனித்துவமானவன் , (எவருக்கும்) நிகரானவன் அல்ல என்றும் இஸ்லாம் நம்புகிறது.மார்க்கத்தின் ஒரு இளம் மாணவர் ஒருமுறை இறைவனை , கருணை மற்றும் அழகின் கருத்தாக்க குணங்கள் அனைத்தும் ஒரே சாரத்தில் ஒன்றிணைந்துள்ளன என்று வரையறுத்தார். சிலர் இந்த வரையறையை ஏற்றுக் கொள்ளலாம் , ஆனால் இஸ்லாத்தைப் பொறுத்தவரை இது ஒரு குளிர் ந்த மற்றும் பயனற்ற சுருக்க குறிப்பாகும்.. வாழ்க்கை என்பது எப்போதுமே, விஞ்ஞானம், கலை, கவிதை மற்றும் மார்க்கம் ஆகியவற்றிற்கு மர்மானதொரு விஷயமாகும்.

புனித குர்ஆன் என்ன கூறுகிறது என்று பார்ப்போம்: **“கூறுவீராக: அல்லாஹ் ஒருவனே ஆவான் , அவன் தேவையற்றவன் ; அவன் எவரையும் பெறவில்லை;அவன் எவராலும் பெறப்படவு மில்லை அவனுக்கு இணை எவருமில்லை(அல் இ:ஃக்லாஸ்,அதிகாரம் 112).**

இம்முழு பிரபஞ்சமும் [அல்லாஹ்வின் படைப்பாகும்]. இருப்பினும், மனிதனுக்கு ஒரு சிறப்புள்ளது ஏனென்றால் அவன் பூமியில் இறைவனின் பிரதிநிதியாவான்:.”:ஃகலீ:ஃபா” (அல்பகரா 2:31). மனிதனின் ஆன்மீக இயல்பு அல்லாஹ்விடமிருந்துள்ள ஓர் அருளாகும் , பிறகு மனிதன் இனம் அல்லது மொழி அல்லது வேறு எந்த வித்தியாசத்தின் தடைகளுக்கும் மேலா க உள்ளான். இன்னும் இதனால் இஸ்லாத்தின் சகோதரத்துவம் ஒரு நடைமுறைக் கோட்பாடாகிவிடுகின்றது; அது தூய நபி(ஸல்) அவர்களால் பரிந்துரைக்கப்பட்ட கோட்பாடாகும்..

புனித குர்ஆனின் உன்னதமான வசனங்களில் (அல்-பகாரா 2: 256) அல்லாஹ்வின் பண்புகளின் கம்பீரமும், மகத்துவமும் இவ்வாறு குறிப்பிடப்படுகின்றன: **“அல்லாஹ் நாயன் (வணக்கத்திற்குரிய) அவனைத்தவிர- அவன் என்றென்றும் ஜீவித்திருப்பவன். வேறு இல்லை, என்றென்றும் நிலைத்திருப்பவன்;, அவனை சிறு துயிலோ, உறக்கமோ பீடிக்கா து, வானங்களிலுள்ளவையும், பூமியிலுள்ளவையும் அவனுக்கே உரியன, அவன் அனுமதியின்றி அவனிடம் யார் பரிந்துரை செய்ய முடியும்? அவர்களுக்கு முன்னால் இருப்ப வற்றையும், பின்னா ல் இருப்ப வற்றையும் அவன் நன்கறிவான்;. அவனது ஞானத்திலிருந்து எதனையும், அவன் நாட்டமின்றி, எவரும் அறிந்துகொள்ள முடியாது (குர்ஸிய்யு) அவனுடைய அரியாசனம். வானங்களிலும், பூமியிலும் பரந்து நிற்கின்றது அவ்விரண்டையும் காப்பது. அவன் மிக உயர்ந்தவன் - அவனுக்குச் சிரமத்தை உண்டாக்குவதில்லை; மகிமை மிக்கவன்”** (அல்-பகாரா 2: 256)

அல்லாஹ் நித்தியமானவன் ஆவான், சுருக்கக் குறிப்பு (அல்லது கருத்தாக்கம்) அல்ல. எல்லா படைப்புகளும் அவ னைச் சார்ந்து இருக்கும்போது அவன் சுதந்திரமானவ னாவான். அனைத்துமே தீர்ந்து போய் (காலியாகி) விட்டாலும், அவன்[அல்லாஹ்] மட்டுமே நித்தியமாக (நிலைத்து) இருக்கிறா ன். அவனுக்கு ஓய்வோ அல்லது தூக்கமோ கிடையாது, ஏனென்றால் அவ ன் உயிருடன் இருக்கக் கூடியவனும் முழுமையானவனும் ஆவான்.

மனிதன் தன்னைப் பாதுகாக்க இந்த உலகில் உள்ள வழக்கறிஞர்களையும், பரிந்துரை செய்பவ ர்களையும் அழைத்துச் செல்ல முடியும், ஆனால் அல்லாஹ்வின் கருணை யும், மன்னிப்பு ம் இல்லாமல் அவ ன் முன் வ ரும் (அளவிற்கு) பெரியவர் யார்? [யாரும் இல்லை!!!]

அவனுடைய அறிவு எல்லாவற்றையும் மிஞ்சி நிற் பதால் எந்த பரிந்துரையும், வழக்கறிஞரும் ( அவனுக்கு) அவசியமி ல்லை. நேரம் மற்றும் நிரப்பிடம் (space) பற்றிய கருத்து அவ னுடைய படைப்புகளுக்கேப் பொருந்துமே த் தவிர, அவனுக்கல்ல. அவ ன் எல்லா இடங்களிலும் ஒரே நேரத்தில் இருக்கின்றான், முழு பிரபஞ்சமும் அவ னைச் சார்ந்தது என்றாலும் ,அதனால் அவனுக்கு எந்த முயற்சியோ அல்லது வேதனையோ அவசியப்படாது. விண்வெளியைப் பொறுத்தவரை நாம் கம்பீரத்தைக் கருத்தில் கொண்டால் , அவனே மிக உயர்ந்தவ ன் [அல்லாஹ் வே மிக உயர்ந்தவனு ம், அவனுடைய மாட்சிமையே மிக உயர்ந்ததுமாகும்].

ஒழுக்கநெறி பற்றிய நமது கருத்துகளின்படி, அல்லாஹ்வை நல்லவன் (பர்), உண்மை (ஹக்) , தாராளமானவன்(கரீ ம்) - ஒரு உலோபிக்கு நேர்மாறாக நா ம் கருதுகிறோம். நன்மைகளை தொடர்புடைய குணங்களினால் அளவிட முடியாது அல்லது ஒரு நபரைக் குறிப்பிடுவதன் மூலமோ அல்லது நன்மை செய்யக்கூடியவரின் மீது அதிகரித்து ள்ள மற்றும் ( அவர் மீது) பொழியப்பட்ட ஒரு நன்மையை க் கொண்டோ அளவிட முடியாது. அது முழுமையான நன்மையாகும், அது அல்லாஹ்வின் மாபெரும் திட்டத்தின் படி அதற்காக விதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் நிரந்தர இலாபங்களால் அளவிடப்படுகிறது. நமது வாழ்வில் உள்ள உண்மை என்பது நிகழ க்கூடிய சம்பவம், நிரைவான ஆதாரங்கள் மற்றும் உண்மைக்கு நம்முடைய கருத்துகளின் அடிப்படையில் எதையாவது கண்டுபிடிப்பது என்பது மட்டுமல்ல. (மாறாக) அல்லாஹ்வின் உண்மை யே முழுமையானதா கும். அது ( வெறும்) சான்றுகள் அல்லது நிகழ க்கூடிய சம்பவத்தை (நிகழ்தகவைப்) பொறுத்தல்ல. (உண்மையில்) அல்லாஹ் தான் முழுமையான யதார்த்தமா வான், அவனே இந்த பெயருக்கு (முழமையானத்) தகுதியுடையவனாவான்.

சமாதானம் \ சாந்தி இஸ்லா த்துடன் ஆன்மீக ரீதியில் தொடர்புடையதாகும், ஏனெனில் இது சமூக மற்றும் தனிப்பட்ட வாழ்க்கையின் அடிப்படைக் கருத்தை அடிப்படையாகக் கொண்டதா கும். சொர்க்கத்தில் “அதிர்ஷ்டசாலிகள்” பெறும் முதல் வாழ்த்து “அமைதி”(என்பதாகும்). இஸ்லாம் அமைதியின் மா ர்க்கமாகும்; வெளிப்புற அமைதி அல்ல , ஏனென்றால் அது வெளியில் தீமையுடன் முரண்படலாம் (அல்லது போராடலாம்) , ஆனால் ஒரு உளட்புற அமைதி , எல்லா முரண்பாடுகளும் நீக்கப்பட்டு வலி , துக்கம் மற்றும் ஏமாற்றம் மறைந்து போகின்ற ஆன்மாவின் அமைதியாகும்.

உறுதியான மற்றும் மாற்றி யமைக்க முடியாத ஒரே ஆதரவு அல்லாஹ்வின் மீதான நம்முடைய நித்திய நம்பிக்கை யாகும். அவ னுடைய கருணை எல்லையற்றதா கும். அவனுடைய கருணையானது நம் முடையத் தேவைகளை மி ஞ்சிவிடுகிறது. நமக்கு நாம் அடிக்கடி நமக்குத் தீங்கு விளைவிக்கின்ற விஷயங்களை விரும்புகிறோம் , நம்முடைய ஆன்மீக இயல்பு வேண்டுகின்ற விஷயங்களைப் பற்றி நாம் அறி யாதவர்களாக இருக்கின்றோம் . அல்லாஹ்வின் (புறமிருந்துள்ள)நன்மையானது கேட்கப்படாமலேயே வருகின்றது, அது நமக்கு அபரிமிதமாக(ஏராளமாக) வருகிறது.

புனித திருக்குர்ஆன் கூறுகிறது: **"அவனே அல்லாஹ் , வணக்கத்திற்குரிய நாயன் அவனைத் தவர , வேறு யாரும் இல்லை , அவனே பேரரசன் , மிகப்பரிசுத்தமானவன், சாந்தியளிப்பவன், தஞ்சமளிப்பவன், பாதுகாப்பவன், (யாவரையும்மிகைப்பவன் (அடக்கியாள்பவன், பெருமைக்குரித்தானவன் - அவர்கள் இணைவைப்பவற்றையெல்லாம் விட்டு அல்லாஹ் மிகத் .தூய்மையானவன் அவன் தான் அல்லாஹ் ; படைப்பவன், ஒழுங்குபடுத்தி உண்டாக்குபவன், உருவமளிப்பவன் அவனுக்கு அழகிய திருநாமங்கள் - இருக்கின்றன, வானங்களிலும், பூமியிலும் உள்ளவையாவும் அவனையே**

**தஸ்பீஹு மிகைத்தவன் (யாவரையும்) அவனே - செய்கின்றன (செய்து துதி) ஞானம் மிக்கவன்”.** (அல் ஹஷ்ர் 59:23-24)

அல்லாஹ் - முழுநிறைவான பெயர்கள் அனைத்தும் அவனுடையதா கும். அவனே எங்கள் பாதுகாவல னும் எங்களது நம்பிக்கையும் ஆகும். அவனுடைய இயற்பண்புகள் மிகப்பரந்ததும், முடிவில்லாததுமாகும் என்பதால் , இந்த எல்லையற்ற குணங்கள் அனைத்தையும் சுட்டிக்காட்டுவது எவருக்கும் கடினமாகும். ஆனால் இன்ஷா அல்லாஹ், அவனுடைய வழிகாட்டுதலால்,நான் ஒரு எளிமையான(வழியில்) முயற்சி செய்து எனது அடுத்த குத்பாக்களில் அதனை விளக்குகிறேன். அல்லாஹ் எனக்கு அவ்வாறு செய்வதற்குரிய அருளையும், சக்தியையும் வழங்குவானாக! இதன் மூலம் அவனுடைய அடியார்களாகிய நீங்கள் அவனது பண்புகளை நினைவுக் கூர்வதன் மூலம் அவனை அணுகவும் முடியும்.இன்ஷா-அல்லாஹ், ஆமீன்.

**Translated by:**

**S.H. FAISAL**


**Editing & Publishing are done by**
***AMIR***
***JAMAAT - UL-SAHIH-AL-ISLAM***
***TAMIL NADU***
**Ph No: 917502272774**